RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s330

OPEN ACCESS

# எஸ். ராமகிருஷ்ணன் சித்திரித்த பெண் மாந்தர்களது உளவியலில் வெளிப்படும் சமூக மாற்றம்

**கி. ப்ரியா மகேசுவரி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, கிழக்குத் தாம்பரம், சென்னை-600059, தமிழ்நாடு, இந்தியா.

# The Social Change Represented in the Psychology of Women Characters Portrayed by S. Ramakrishnan

**K. Priya Maheswari** [a, *]

[a] Department of Tamil, Madras Christian College, East Tambaram, Chennai-600059, Tamil Nadu, India

* Corresponding Author: priyamaheswari1995@yahoo.com

Received: 06-04-2021
Revised: 18-04-2022
Accepted: 23-04-2022
Published: 16-07-2022

Check for updates

**ABSTRACT**

Tamil society is considered to be one of the oldest societies. Various problems like caste and economic inequalities along with gender differences exist in this society. Among these, gender inequality serves as a subject of debate till date. In society, women are not treated equally. In areas such as education, employment and marriage, women are treated poorly as compared to men. This inequality appears in different manners at different stages in time. Contemporary literature is written to show antagonism to this inequality. Particularly, short stories play a vital role in delineating these differences. Short story writer S. Ramakrishnan has given centre stage to the day-to-day problems faced by women in his short stories. The female characters portrayed in his stories struggle to establish their equality in spite of the troubles life throws at them. From his collection of short stories named Avalathu Veedu, two stories Avalathu Veedu and Embaavai are taken as primary sources for this research article. This article analyses the psychology of two female characters, Agalya and Nanmathi, who represent the main characters of the selected short stories. The social change represented from their psychological characteristics is also discussed. The principles of psychological defence mechanism is used to analyse the characteristics of these female characters.

**Keywords:** Avalathu Veedu, Embaavai, Social Change, S. Ramakrishnan, Female Characters

## முன்னுரை

உலக நாடுகளில் பல்வேறு சமூகங்கள் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்த வண்ணம் இருக்கின்றன. ஒவ்வொரு சமூகத்திலும் தனித்துவமான சில கூறுகள் காணப்படுகின்றன. அவ்வகையில், தமிழ்ச் சமூகத்தில் பெண்களுக்கென சில கட்டுப்பாட்டுக் கூறுகள் இருக்கின்றன. இச்சமூகத்தில் பெண்களுக்குக் கல்வி உரிமையும், பொருளாதாரச் சமத்துவமும் பெரும் அளவில் அனுமதிக்கப்படவில்லை. இச்சமூகக் கட்டுப்பாடுகள், பெண்கள் மீது திணிக்கும் கொடுமைகளை இக்கால இலக்கியங்கள் வெளிப்படுத்தி வருகின்றன. குறிப்பாகச், சிறுகதை இலக்கியம், சமூகத்தில் நிலவும் பெண் சிக்கல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த வண்ணமிருக்கிறது. அவ்வகையில் எஸ். ராமகிருஷ்ணன் படைத்த சிறுகதைகளில் இடம்பெறும் பெண் மாந்தர்களின் சித்திரிப்புகள் சமூக மாற்றத்திற்கு அடிகோலும் வகையில் அமைகின்றன. அப்பெண் மாந்தர்களின் உளவியலில்

வெளிப்படும் சமூக மாற்றத்திற்கான தூண்டுதல்களைக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டின் ஒரு கூறாக அமையும் தற்காப்பு உத்திகளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஸ். ராமகிருஷ்ணன் சித்திரித்த அவளது வீடு மற்றும் எம்பாவாய் ஆகிய இரு சிறுகதைகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## உளவியலும் தற்காப்பு உத்திகளும்

மனித மனத்தின் செயற்பாடுகளுக்கான காரணங்களை அறியும் துறையாக உளவியல் திகழ்கிறது. இத்துறைக்குப் பெரும் பங்காற்றியவர் சிக்மண்ட் ஃபிராய்டு.

'மனத்தின் இயல்பு, பாகுபாடு, செயல்பாடு என்னும் நிலைகளில் அதனை ஆராய்ந்து உளவியல் ஆய்வுக்கு அறிவியல் அந்தஸ்து அளித்தவர் இவர்தான்' (Manavalan, 1995).

இவர் உளப்பகுப்பாய்வு முறையில் மனித மனத்தை இட், ஈகோ, சூப்பர் ஈகோ எனப் பாகுபாடு செய்துள்ளார். ஆழ்மனதில் எழும் ஆசைகளைக் கொண்ட பகுதியாக இட்டும், சமுதாய நெறிமுறைகளைக் கொண்ட பகுதியாகச் சூப்பர் ஈகோவும் அமைகின்றன. இட்டின் தேவைகளைச் சமூக ஏற்புகளுக்கு ஏற்ப நிறைவேற்ற உதவும் பகுதி ஈகோ எனும் தன்முனைப்பாகும். இந்த ஈகோ எனும் தன்முனைப்பு, உள்ளத்தினைச் சமச்சீராக வைத்துக் கொள்ளப் பாடுபடுகிறது.

'சமுதாய தர நிர்ணயங்கள், பண்பாடு வலியுறுத்தும் கட்டுப்பாடுகள் போன்றவை மனிதனில் இயற்கையாய் எழும் உள எழுச்சிகளையும், இயல்பூக்கங்களையும், உந்துதல்களையும் கட்டுப்படுத்தும் போது அதனால் ஏற்படும் மன அழுத்தத்தை நீக்கிக் கொள்ள மனித மனம் பல்வேறு வழிகளில் முயல்கிறது.' என்னும் கருத்து தன்முனைப்பு மனத்தின் செயல்பாட்டினைக் குறிக்கிறது. ஈகோ மேற்கொள்ளும் வழிமுறைகளைத் தற்காப்பு உத்திகள் என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர் (Kanchana, 2007).

சமூகக் கட்டுப்பாடுகளுக்குள் அடங்காத ஆசைகள் தடை செய்யப்படுகின்றன. இதனால் மன அழுத்தம் உருவாகிறது. மன அழுத்தத்தின் வீரியத்தைக் குறைக்கவும், அதனைத் தடுக்கவும் இத்தற்காப்பு உத்திகள் பயன்படுகின்றன. இவ்வுத்திகள் வழி உணர்ச்சிகள் மடைமாற்றம் செய்யப்படுகின்றன.

'இன்ப நாட்டம் கொண்ட இட்டின் தூண்டலால் ஏற்படும் அகத்துடிப்புகளை வெளிப்படையாகக் கூறுவதில் இருந்து காப்பதற்கும், அவற்றை நெறிப்படுத்த எண்ணும் சூப்பர் ஈகோவிற்கும் இடையே நின்று செயல்படும் ஈகோ எனும் தன்முனைப்பு மனம் மேற்கொள்ளும் ஒருநிலைப்பாடே இந்தத் தற்காப்பு உத்திகள்.' என்று ஃபிராய்டு தற்காப்பு உத்திகள் குறித்து விளக்கம் அளிக்கிறார் (Kanchana, 2007).

விருப்பப்புனைவு, பகற்கனவு, பதிலீடு, அடையாளம் காணல், புறத்தெறிப்பு, காரணம் காட்டல், பின்னடைவு, சில கூறுகளை மட்டும் மறத்தல், எதிர்மறை மறுப்பு, விழுப்பமுடைமையாக்கல், எதிர்செயல் உருவாக்கம், உண்மையை ஏற்க மறுத்தல், இடமாற்றம், புதைத்தல், மறுத்து மறத்தல், பின் நோக்கிப் போதல் ஆகியன தற்காப்பு உத்திகளாகக் கொள்ளப்படுகின்றன. இவ்வுத்திகள் குறித்து ஃபிராய்டின் மகளான அன்னா ஃபிராய்டு விரிவான விளக்கங்களை அளித்துள்ளார். அவருக்குப் பின் வந்த உளவியலாளர்கள் இவ்வுத்திகள் குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளனர். இவை நனவிலி நிலையில் வெளிப்படுவதாக உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

## எஸ். ராமகிருஷ்ணன் சித்திரித்த பெண் மாந்தர்கள்

மக்களின் யதார்த்த வாழ்வியலைக் கதைகளாக எழுதி வருபவர் எஸ். ராமகிருஷ்ணன். இவர் தமது கதைகளில் பெண் மாந்தர் சித்திரிப்புகளுக்குத் தனித்துவமான இடத்தை அளித்துள்ளார். இவர் எழுதிய அவளது வீடு எனும் கதையில் இடம்பெறும் அகல்யாவும் எம்பாவாய் கதையில் வரும் நன்மதியும் சமூக மாற்றத்திற்குத் துணை நிற்கும் வகையில் அமைகின்றனர்.

அவளது வீடு எனும் கதையில் இடம்பெறும் அகல்யாவிற்கு பெரிய வீட்டினைத் தனக்கென சொந்தமாக்கிக் கொண்டு அதில் வாழ வேண்டுமென்கிற ஆசை சிறுவயதிலிருந்து இருந்து வருகிறது. அதனை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்று உணர்ந்த நிலையில் வாடகை வீட்டினைத் தேடும் வேலையில் ஈடுபடுகிறாள். தனது விருப்பப்படி அமைந்திருந்த வாடகை வீட்டிற்குத் தன் சம்பளத் தொகையைக் கொடுத்து 20 நாட்கள் அங்கு தனிமையில் சுதந்திரமாகச் சில நேரம் செலவிடுகிறாள். பின் இச்செயல் அவளது கணவனுக்குத் தெரிந்து விடுகிறது. அவள் தன் வாடகை வீட்டிற்குச் செல்வதிலிருந்து தடுக்கப்படுகிறாள்.

எம்பாவாய் கதையில் வரும் நன்மதிக்குச் சிறுவயதில் திருமணம் செய்து வைக்கப்படுகிறது. ஆறாம் வகுப்பு வரை படித்த அவள், தன் ஓய்வு நேரங்களில் நாவல்களைப் படிக்கிறாள். வாஹினி எனும் எழுத்தாளரின் நாவல்களை அதிகமாகப் படிக்கிறாள். தானும் எழுத வேண்டும் என்கிற ஆசை அவளுக்கு ஏற்படுகிறது. வாஹினியை நேரில் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்ட போது அவர்களுக்குள் ஒரு நல்ல நட்பு உருவாகிறது. இந்த நட்பு நன்மதியின் கணவனுக்குப் பிடிக்காமல் போகிறது. அவள் வாஹினியோடு உள்ள நட்பினை முடித்துக் கொண்டு, அவ்வெழுத்தாளரின் நாவல்கள் மட்டுமே தனக்குப் போதும் என முடிவெடுக்கிறாள்.

## பெண் மாந்தர்கள் பயன்படுத்தும் தற்காப்பு உத்தி

அகல்யா மற்றும் நன்மதி ஆகிய இருவரும் ஒரு சில நடத்தைமுறைகளில் ஒன்றுபட்டுத் திகழ்கின்றனர். அகல்யா தனக்கென ஒரு பெரிய வீட்டினை வாங்கிக் கொள்ள முடியாத நிலையில் வாடகை வீட்டிற்காவது உரிமையாளராக வேண்டுமென எண்ணுகிறாள். நன்மதி நாவல்களை எழுத வேண்டுமென விரும்புகிறாள். அது நிறைவேறாத நிலையில் நாவல்கள் படிப்பதே போதுமானது என எண்ணுகிறாள். இவ்விருவரது நடத்தைகளை உளவியல் ரீதியாக ஆராயும் போது விளக்கங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

இவ்விரு பெண் மாந்தர்களும், தங்களது ஆசைகள் அடக்கி அமிழ்த்தப்படும் சூழலில் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். மன அழுத்தத்திலிருந்து விடுபட இவர்கள் இலக்கினைச் சிதைத்து மாற்றுதல் (Aim Inhibition) எனும் உத்தியைப் பயன்படுத்துகின்றனர். இவ்வுத்தி நாம் மனதில் வைத்துள்ள இலக்கினை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் அவ்விலக்கோடு தொடர்புடைய ஒன்றை நிறைவேற்றிக் கொள்வதன் வழி இலக்கினை அடையச் செய்கிறது. 'உள்ளுணர்வுகளின் தேவைகளுக்குச் சில வரம்புகளை வைத்து, மாற்றமடைந்த ஆசையையோ அல்லது ஆசையின் ஒரு பகுதியையோ ஏற்றுக் கொள்ளுதலினை இலக்கினைச் சிதைத்து மாற்றுதல் உத்தி எனக் குறிப்பிடுகின்றனர்.'

அவளது வீடு கதையில் வரும் அகல்யா, சிறுவயதிலிருந்து பெரிய வீட்டினை விலைக்கு வாங்க வேண்டுமென ஆசைப்படுகிறாள். திருமணத்திற்குப் பின்னும் அவளது ஆசை நிறைவேறாத நிலையிலிருக்கிறது. இறுதியில் சொந்தமாக ஒரு வீட்டினை வாங்கினாலும், அது அவள் ஆசைப்பட்டு, எதிர்பார்த்த வீடு போல அமையவில்லை.

'திருமணத்துக்கு முன்பாகவே இரண்டு விஷயங்களில் அகல்யா உறுதியாக இருந்தாள். ஒன்று, அரசு ஊழியரைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. சொந்தத் தொழில் நடத்துபவரைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அவரால்தான், சம்பாதித்து பெரிய வீடு கட்ட முடியும்' (Ramakrishnan, 2020).

'சில சமயம், சாலையில் நடக்கும் போது மூடப்பட்ட பெரிய இரும்பு கதவு கொண்ட வீடுகளின் முன்பு போய் நின்றபடியே அது தன்னுடைய வீடு என்று கற்பனை செய்து கொள்வாள். 'எப்போது இதுபோன்ற வீட்டில் வாழப் போகிறோம்?' என மனம் அடித்துக் கொள்ளும்' (Ramakrishnan, 2020).

என்பவற்றிலிருந்து அகல்யாவிற்குப் பெரிய வீட்டில் வாழ வேண்டுமென்கிற ஆசை இருந்ததையும் அது நிறைவேறாதிருந்ததையும் அறிந்து கொள்ள முடிகிறது. ஆசை நிறைவேறாத சூழலில் மன அழுத்தத்திற்கு அவள் ஆளாகிறாள். அதிலிருந்து விடுபட தன் ஆசையைக் சிதைத்து

மாற்றி அமைத்துக் கொள்கிறாள். பெரிய வீட்டினை வாடகைக்கு எடுத்துக் கொள்வதன் வழி தன் ஆசையைத் தற்காலிகமாக நிறைவேற்றிக் கொள்கிறாள்.

'வீட்டை வாடகைக்குக் கேட்பது போல சும்மா விசாரித்துச் சுற்றிப் பார்ப்பது, அவளுக்குப் பிடித்தமானதாக இருந்தது.

காலியாக உள்ள வீட்டின் தரையில் படுத்துக் கொள்வாள் அல்லது பாத்ரூம் குழாயைத் திறந்துவிட்டு போதும் போதுமென முகம் கழுவுவாள். சில வீடுகளில் ஹேர்பின்னால் தனது பெயரை எழுதி வைத்துவிட்டு வருவாள்' (Ramakrishnan, 2020).

என்பதிலிருந்து அகல்யா ஒவ்வொரு வாடகை வீட்டிற்குச் சென்ற போதும் அதனைத் தன் ஆசை வீடாகக் கருதினாள் என்பதை அறிய முடிகிறது. இறுதியில் அவள் எதிர்பார்த்த வீட்டினை வாடகைக்கு எடுத்துக் கொள்கிறாள்.

'இது தனது வீடு. தனக்கு மட்டுமேயான வீடு. இப்படி ஒரு வீடு தனக்கு இருப்பது யாருக்கும் தெரியக் கூடாது. இந்த வீட்டில் தன்னோடு யாரும் குடியிருக்கப் போவது இல்லை. இங்கே நான் மட்டுமே வாழப் போகிறேன் என அவளுக்குச் சந்தோஷமாக இருந்தது' (Ramakrishnan, 2020).

என்பதிலிருந்து வாடகை வீட்டினைத் தனது சொந்த வீடாகக் கருதி அதாவது தன் இலக்கினைச் சிதைத்து மாற்றிக் கொள்வதன் வழி தன் ஆசையை நிறைவேற்றி மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதை அறிந்து கொள்ள முடிகிறது.

எம்பாவாய் கதையில் வரும் நன்மதி நாவல்களை ஓய்வு நேரங்களில் விரும்பிப் படிக்கிறாள். அதுமட்டுமல்லாமல் நாவல்கள் எழுத வேண்டுமென்பதை ஆசையாகக் கொண்டுள்ளாள். அந்த ஆசைதான், எழுத்தாளர் வாஹினியோடு நல்ல நட்பினை ஏற்படுத்திக் கொள்ள உதவுகிறது.

'வாஹினி எவ்வளவு நன்றாக எழுதுகிறாள். மனதில் தோன்றுவதை எழுத்தாக மாற்றுவது எவ்வளவு பெரிய விந்தை. எழுதுகிற பெண்கள் அதிர்ஷ்டசாலிகள் என அம்மா தனக்குத் தானே சொல்லிக் கொள்வாள் (Ramakrishnan, 2020).' என்பதிலிருந்தும்,

'உங்களை மாதிரி எல்லோராலயும் எழுத முடியுமா?' என்று வாஹினியிடம் நன்மதி கேட்டதிலிருந்தும் அவளுக்குள் எழுத்தாளர் ஆக வேண்டுமென்கிற ஆசை இருந்ததை அறிய முடிகிறது (Ramakrishnan, 2020).

வாஹினியோடு கொண்டிருந்த நட்பு அவளது கணவனுக்குப் பிடிக்காமல் போனதால், அவள் இரண்டு மாத காலம் நாவல்கள் படிப்பதிலிருந்து தடுக்கப்படுகிறாள். அதன் பின்னர், எழுத்தாளர் ஆக வேண்டும் என்கிற தனது ஆசையினைச் சிதைத்து, நாவல்கள் படிப்பது தனக்குப் போதுமானது என முடிவெடுத்து மன அழுத்தத்திலிருந்து விடுபடுகிறாள்.

'நீ எழுத போராடுகிறவள். நான் படிப்பதற்குப் போராடுகிறவள். என்னைப் போல உள்ள பெண்கள் எழுத வருவதற்கு இன்னும் நூறு வருஷமாகிவிடும். நான் காக்கையைப் போன்றவள். என்னால் அதிக தூரம் பறக்க முடியாது, வீட்டுக்கும் மரத்திற்கும் இடையில் உள்ள நூறடி தான் என் வாழ்க்கை.....இனி எனக்கு நீ தேவையில்லை. உன் நாவல்களே போதும்.' என்று நன்மதி கூறுவதிலிருந்து தன் இலக்கினைச் சிதைத்து மாற்றி மன அழுத்தத்தினைத் தவிர்த்திருப்பதை அறிய முடிகிறது (Ramakrishnan, 2020).

## பெண் மாந்தரது சித்திரிப்பில் வெளிப்படும் சமூக மாற்றம்

'சமூகவியலில் பெண்கள் இரண்டாம்தரக் குடிகளாக, ஆண் சார்புடையவர்களாக, தனித்து இயங்க இயலாதவர்களாகக் காட்டப்படுகின்றனர். இலக்கியங்களில் பெண் வர்ணனைக்குரியவளாக, அழகியாக, அனுபவிக்க உகந்தவளாக, வாழ்க்கைத்துணையாக என்று ஏறக்குறைய ஒரே கோணத்திலேயே படைக்கப்பட்டிருக்கிறாள் (Prema, 2000). இந்தக் கருத்திலிருந்து மாறுபட்டவர்களாக சித்திரித்த பெண் மாந்தர்கள் திகழ்கின்றனர். அகல்யா மற்றும் நன்மதி ஆகிய இருவரும் தங்களது ஆசைகளை

நிறைவேற்றிக் கொள்ளப் போராடுபவர்களாக இருக்கின்றனர். தமிழ்ச் சமூகத்தில், பெண்களின் ஆசைகளுக்கு மதிப்பு அளிக்கப்படாத நிலை காணப்படுகிறது. பெண்ணானவள் பெரும்பாலும் தன் ஆசைகளிலிருந்து பின்வாங்குபவளாகத் திகழ்கிறாள். இந்நிலையை மாற்றும் வகையில் எஸ். ராமகிருஷ்ணன் தமது பெண் மாந்தர்களின் உளநிலைகளைச் சித்திரித்துள்ளார். அகல்யாவும் நன்மதியும் தங்களது ஆசைகளை ஏதேனும் ஒரு வகையில் நிறைவேற்றிக் கொள்கின்றனர். அகல்யா, பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இருந்ததால் தனது ஆசையை எளிதில் நிறைவேற்ற முடிவெடுக்கிறாள். கணவனால் தடுக்கப்பட்ட போதும் 20 நாட்கள் தான் ஆசைப்பட்ட வீட்டில் சுதந்திரமாக வாழ்கிறாள். நன்மதி, பொருளாதாரச் சுதந்திரமற்றவளாக இருந்தாலும் தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் தன் படிக்கும் வழக்கத்தை விட்டுக் கொடுக்காதவளாக இருக்கிறாள். ஆக, இவ்விரு பெண் மாந்தர்களும் தங்களது விருப்பங்களிலிருந்து பின்வாங்கவில்லை என்பது புலப்படுகிறது. பெண்கள் தங்களது விருப்பங்களை முற்றிலுமாக இழந்து வாழ வேண்டிய அவசியமில்லை எனும் சிந்தனையை மக்கள் மனதில் இப்பெண்கள் விதைக்கின்றனர்.

## முடிவுரை

பெண்ணின் விருப்பங்களுக்குச் சமூகம் முக்கியத்துவம் அளிக்காத நிலையில், அவள் அதனை மாற்றப் போராட வேண்டும். மாற்றத்திற்காகப் போராடும் சூழலில் பொருளாதாரச் சுதந்திரத்தின் தேவையும் இன்றியமையாததாக இருக்கிறது. எஸ். ராமகிருஷ்ணன் இரு நிலைகளில் சமூக மாற்றத்திற்கு வித்திடும் பெண்களைப் படைத்துள்ளார். பொருளாதாரச் சுதந்திரம் அடைந்த பெண்ணாக இருந்தாலும் பொருளாதாரச் சுதந்திரமற்ற பெண்ணாக இருந்தாலும் சமூக எண்ணங்களின் மாற்றத்திற்கு அடிகோலுபவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். இலக்கிலிருந்து பின்வாங்காமல் மாற்றி அமைத்துக் கொள்வதன் வழி தன்னைப் பின்னுக்குத் தள்ளும் சமூகத்தை மாற்ற வேண்டும் எனும் கருத்தின் அடிப்படையில் இவரது பெண் மாந்தர் சித்திரிப்புகள் அமைந்திருப்பது ஆய்வின் வழி புலப்படுகிறது.

## References

Kanchana, R., (2007) Ilakkiyamum Kaappu Uthigalum Padaippilakkiyamum, Ulagatamil Aaraichiniruvanam, Chennai, India.

Manavalan, A. A., (1995) Irubatham Nootrandin Ilakkiya Kotpaadugal, Ulagatamil Aaraichiniruvanam, Chennai, India.

Prema, R., (2000) Penniyam, Paari Puthaga Pannai, Chennai, India.

Ramakrishnan, S., (2020) Avalathu Veedu, Desanthri Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License